**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் (கூறு 1 – மாகாண பகுதி) - 2022**

---

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (கூறு 1 – மாகாண பகுதி) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (MPAHAPCLG) மாகாணங்களுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சாக உள்ளதுடன் ஒன்பது மாகாண கல்வி அமைச்சுக்கள் இச்செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆக உள்ளதுடன் ஐடிஏ ஆல் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உலக வங்கி/IDA ஐ.அ.டொலர் கடன் மீதி அந்தத் திகதியின் இலங்கை ரூபா பெறுமதிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை, இதன் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள கடன் மீதி மற்றும் அபிவிருத்தி செலவின மீதி என்பன குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 யூலை 18 ஆம் திகதிய 3/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் II ஆம் பந்தி மற்றும் 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி | ஆண்டின் போது ஊவா மாகாணத்தில் நடைபெற்ற மாகாண வழிநடாத்தல் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக 28 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 170,500 தொகை சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்பட்டுள்ளது. | ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட 02/2018 ஆம் இலக்க திட்டமிடல் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த செயற்திட்டத்தின் கீழ் 09 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகள் (DLI) அடைந்துகொள்ளப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகளை குறிக்கும் முன்னேற்ற விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | DLIs கல்வி அமைச்சால் அளவிடப்படுகிறது. எனவே இது தொடர்பான தகவல்களும் பொறுப்புக்களும் கல்வி அமைச்சின் பொறுப்பாகும். | DLI முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளரால் கோரப்பட்ட ஏனைய தகவல்கள் கொடுக்கப்பட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இச் செயற்திட்டத்திற்காக நான்கு செயற்திட்ட அபிவிருத்தி நோக்கங்கள் (PDO) அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | PDO முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளரால் கோரப்பட்ட ஏனைய தகவல்கள் கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) **தென் மாகாணம்** | | |
| (i) **ஆங்கில மொழிக் கல்வியை மேம்படுத்துதல் (DLI 01)**<br>ஆங்கில மொழிக் கல்வியின் மேம்பாட்டின் கீழ் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை தென் மாகாணத்தில் 58 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த கூறின் கீழ் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மாணவர்களின் செயலாற்றல் மட்டம் குறைந்தபட்சம் 60 சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும் அது சம்பந்தமாக நடாத்தப்பட்ட பின்தொடர்தல் பரீட்சிப்பின் பெறுபேறுகள் கணக்காய்வு செய்யப்பட்ட காலமான 2023 மே இறுதி வரை வெளியிடப்படவில்லை. எனினும் 07 வலய அலுவலகங்களின் இறுதிப் பருவத் தேர்வில் ஆங்கில மொழிக்கான மதிப்பெண்களை ஒப்பிடும் போது 8 மற்றும் 9 ஆம் தரத்தின் 6243 மற்றும் 6540 மாணவர்களின் சராசரி மதிப்பெண்கள் முறையே 37.37 மற்றும் 37.83 சதவீதமாகும். | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடையப்பட வேண்டும் |
| (ii) **கணிதக் கல்வியை மேம்படுத்துதல் (DLI 02)**<br>2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை தென் மாகாணத்தில் கணிதக் கல்வியின் முன்னேற்றத்தின் கீழ் 38 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மாணவர்களின் செயலாற்றல் மட்டம் குறைந்தபட்சம் 60 சதவீதமாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது தொடர்பான பின்தொடர்தல் பரீட்சிப்பு முடிவுகள் கணக்காய்வு காலப்பகுதியான 2023 மே இறுதி வரை வெளியிடப்படவில்லை. எனினும், 08 வலய | -மேற்படி- | -மேற்படி- |

அலுவலகங்களின் இறுதித் தேர்வில் கணிதப் பாடத்திற்குப் பெற்ற மதிப்பெண்களை ஒப்பிடும் போது, கணிதப் பாடத்திற்கு 8 மற்றும் 9 ஆம் தரத்தின் 4826 மற்றும் 5090 மாணவர்களினால் பெறப்பட்ட சராசரி மதிப்பெண்கள் முறையே 47.97 சதவீதம் மற்றும் 44.38 சதவீதமாகும்.

**3.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

| | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | | **தென் மாகாணம்** | | |
| | (i) | பாடசாலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக அனைத்து தேசிய மற்றும் மாகாண சபைப் பாடசாலைகளுக்கும் பாடசாலை அடிப்படையிலான கற்றல் மானியங்களை வழங்குவது தொடர்பான கல்விச் செயலாளரின் 2022 ஒக்தோபர் 14 ஆம் திகதிய 34/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி மானியங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய 10 பகுதிகள் (செயற்திட்டக் கூறுகள் உட்பட) கண்டறியப்பட்டது. பாடசாலை தளபாடங்களை கொள்வனவு செய்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்கு அதிகபட்சமாக 50 சதவீதத்திற்கு உட்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 296 பாடசாலைகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகளுக்கு மாத்திரமே ரூபா 67 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | ஏற்படும் செலவினங்கள் செயற்திட்ட DLIs உடன் இணங்குதல் வேண்டும். |
| | (ii) | கணனிகள் மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 85,766,439 தொகை செலவிடப்பட்டது. இந்தகொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நேரடியாகப் பயன்படுத்தப்பட்டதென்பது அவதானிக்கப்படவில்லை. இது மொத்த செலவினத்தில் 24.8 சதவீதமாகும். | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | | **வடமேல் மாகாணம்** | | |
| | (i) | இச்செயற்திட்டத்தின் DLI 6 குறிகாட்டியின் நோக்கம், பாடசாலையின் தர உறுதிப்பாட்டிற்கான தேசிய முறைமையை உருவாக்குவதன் விளைவாக பாடசாலை சமூகம் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | சார்ந்த தர உத்தரவாதம் சுய நேர்முகப்பரீட்சை மற்றும் வெளிப்புற மதிப்பாய்வு என இருந்த போதிலும் அந்த DLI 6 ஐப் பயன்படுத்தி ரூபா 6 மில்லியன் செலவிடுவதன் மூலம் நூலகங்களுக்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | | |
| (ii) | செயற்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மற்றும் பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகள் (DLI) காணப்படும் போது அதற்கு முரணாக மீளாய்வாண்டில் விவசாய உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், வீட்டு விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் அழகியல் சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 14 மில்லியன் தொகை செலவிடப்பட்டது, | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் கணனிகள் மற்றும் கணனி உபகரணங்களை மீளாய்வாண்டில் ரூபா 42 மில்லியன் செலவில் கொள்வனவு செய்துள்ளது. இச் செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கத்தை சரியாக விளங்கிக் கொள்ளாமல் மாகாணத்தில் கணனிகளின் தேவை பூர்த்தி செய்யப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 68 மேசைக் கணினிகளும், 30 ரப் கணனிகளும் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் ரூபா 170,000 படி கொள்வனவு செய்யப்பட்ட 20 மடிக்கணனிகள் வாரியபொல கணித மற்றும் ஆங்கிலப் பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்பட்டு 2023 ஏப்ரல் 18 வரை விளைவற்றிருந்தன. | -மேற்படி- | ஏற்படும் செலவினங்கள் செயற்திட்ட DLIs இன் தகவலுடன் இணங்க வேண்டும். மேலும் விபரங்கள் கோரப்படும் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| | **விளைவற்ற சொத்துக்கள்** | **விளைவற்ற காலப்பகுதி ஆண்டுகள்** | **ஏற்பட்ட கிரயம் ரூபா மில்லியன்** | **காரணம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| (அ) | கிரிபாவா மத்திய கல்லூரி - ஆசிரியர் விடுதிகள் | 2 ஆண்டுகள் | 1.1 | குறிப்பிடப்படவில்லை. | DLI 5 இன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - புதிய தொழில் ரீதியாக தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் அளவின் அதிகரிப்பு. | விடுதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | அதிபர் விடுதி - சாலிய அசோக மத்திய பாடசாலை | 2 ஆண்டுகள் | 1.9 | பாடசாலைக்கு அருகிலேயே அதிபரின் வீடு உள்ளது, கணித ஆசிரியர் இல்லாதமை மற்றும் பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியர்கள் பற்றாக்குறை | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ஆசிரியர் விடுதி - அங்கமுவ கனிஷ்ட பாடசாலை | 1½ ஆண்டுகள் | 1.8 | பாடசாலையில் ஆங்கிலம் மற்றும் கணித ஆசிரியர்கள் இல்லாததால் மேலும் இரண்டு ஆசிரியர்கள் விடுதியில் குடியேறினர் | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | ஆங்கிலம் மற்றும் கணித கற்றல் நிலையம் - வாரியபொல கல்வி அபிவிருத்தி நிலையம் | 2 ஆண்டுகள் | 53.2 | (அ) கல்வி அபிவிருத்தி நிலையத்திற்கு கையளிப்பதில் தாமதம்.<br>(ஆ) மின்சாரம் மற்றும் நீர் இல்லாமை மற்றும் வளாகத்திற்கான நுழைவு என்பன ஏற்பாடு செய்யப்பட்டிக்கவில்லை. | உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் மொத்த மின்சார வழங்கலைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | மேலதிக தாமதமின்றி பயிற்சி நிலையத்தை குறித்துரைத்த நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வடமேல் மாகாணம்** | | |
| **வாரியபொலவில் ஆங்கிலம் மற்றும் கணிதக் கற்றல் நிலையத்தை நிர்மாணித்தல்** | | |
| குறித்த செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபா 48.6 மில்லியன் மற்றும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 7.4 மில்லியன் என நிர்மாண கம்பனிக்கு ரூபா 56 மில்லியன் மொத்த பெறுமதி செலுத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் மின்சாரம் மற்றும் காணி தயார்படுத்தல் ஆகியவற்றிற்காக ரூபா 4.8 மில்லியனும், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக ரூபா 10 மில்லியனும் செலவிடப்பட்டது, அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் மொத்த கிரயம் ரூபா 71 மில்லியனாகும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | இக்கட்டடிடத்தை விரைவில் செயற்திட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (i) குறித்த தொழில்துறைக்கான ஒப்பந்த காலப்பகுதி 2019 நவம்பர் 02 முதல் 2020 நவம்பர் 29 வரை இருந்த போதிலும், 2021 ஒக்தோபர் 05 வரை மேலும் 10 மாதங்கள் நீடிப்பு வழங்கப்பட்டது. அரசாங்க பெறுகை வழிகாட்டியின் 4.2.2 இன் பிரகாரம் குறித்த நிர்மாணத்திற்கான நியாயமான காலம் 40 வாரங்களான போதிலும் ஏறத்தாழ 100 வாரங்கள் இந்த நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டன. | -மேற்படி- | -மேற்படி- |
| (ii) இறுதி விலைப்பட்டியலின் பிரகாரம் வாரியபொல பிரதேச பொறியியலாளர் 2021 ஒக்தோபர் 05 இல் நீர்ப்பாசனத் தொழில் நிறைவு செய்யப்பட்டதென உறுதிப்படுத்தப்பட்டது, மேற்படி கட்டிடம் சம்பிரதாயமாக வாரியபொல கல்வி அபிவிருத்தி நிலையத்திற்கு 2022 ஏப்ரல் 06 இல் கையளிக்கப்பட்டதன் காரணமாக கட்டிடத்தை கையளிப்பதில் மேலும் 06 மாதங்கள் தாமதம் ஏற்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) 2023 ஏப்ரல் 06 இல் பணி நிறைவடைந்த நிலையில் தற்காலிக அணுகல் வீதி மற்றும் தற்காலிக மின்சாரம் வழங்கலுடன் கட்டிடம் திறக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு செய்யப்பட்ட 2023 ஏப்ரல் 18 இல் திகதியளவில் தற்காலிக மின்சார விநியோகம் முடிவடைந்து | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை அல்லது நடாத்த திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) வாரியபொல கல்வி அபிவிருத்தி நிலையம் மேற்படி கட்டிடத்திற்கு இலங்கை மின்சார சபையிடமிருந்து மூன்று கட்ட 60 ஆம்பியர் விநியோகத்தை கோரியிருந்தது. ஆனால் இந்த வளாகத்திற்கு வழங்கக்கூடிய சாதாரண விநியோகத்தின் அதிகபட்ச கொள்ளளவு 42 KVA ஐ விட அதிகமாக இருப்பதால், சபை விதிகளின் பிரகாரம் இந்த விநியோகத்தை வழங்க முடியாது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம் அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 2.3 இன் பிரகாரம் பெறுகை கட்டமைப்பின் பொறுப்பான பயன்பாட்டு சேவைகளை முன் பெறுகை செயன்முறை கருத்தில் கொண்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) மின்சார விநியோகத்திற்கான மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 1.8 மில்லியன் குருநாகல் இலங்கை மின்சார சபைக்கு 2022 ஒக்தோபர் 05 இல் செலுத்தப்பட்டது. மேலும், சுமார் 05 மாதங்களுக்குப் பின்னர் 2023 மார்ச் 20 இல் வடமேல் மாகாண பொறியியல் திணைக்களம் இந்த நிலையத்தின் உள்ளக மின்சார விநியோக முறைமைக்கு ரூபா 5 மில்லியன் மதிப்பீட்டை வழங்கியிருந்த போதிலும் கணக்காய்வு செய்யப்பட்ட 2023 ஏப்ரல் 20 வரை பெறுகை தொடங்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) 2023 ஏப்ரல் 18 இல் நடாத்தப்பட்ட களப் பரீட்சிப்பின் போது போது திறக்கப்பட்ட மேற்படி கட்டிடத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br>(i) நிலையான கதவுகள் மற்றும் கதவு பூட்டுகள் போதுமான பலம் இல்லாததுடன் உடைந்து காணப்பட்டது.<br>(ii) கழிவறை முறைமையில் பெரிய நீர் கசிவுகள் அவதானிக்கப்பட்டன. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | நிர்ணயிக்கப்பட்டவாறு பணிகள் நடைபெறுகின்றன என்பதை சான்றுபடுத்துவதற்கு முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் 2022 ஒக்தோபர் 25 இல் இந்த நிலையத்தின் இடத்தைத் தயார்படுத்துவதற்காக ரூபா 4.6 மில்லியன் நிர்மாண கம்பனியுடன் நிர்மாண பணிகளிற்காக ஒப்பந்தம் செய்திருந்தார். இது தொடர்பில் பின்வரும் உண்மைகள் அவதானிக்கப்பட்டன. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | நிர்ணயிக்கப்பட்டவாறு பணிகள் நடைபெறுகின்றன என்பதை சான்றுபடுத்துவதற்கு முறையான கண்காணிப்பு |

| | | |
|---|---|---|
| (i) காணி வடிவமைப்பில் வடிகால் முறைமை வடிவமைக்கப்படவில்லை. கட்டிடத்தின் பின்பகுதியில் தண்ணீர் வெளியேறும் வகையில் வடிகால் வெட்டப்பட்டது, ஆனால் அதில் தேங்கும் தண்ணீரை வெளியேற்றுவதற்கான வழி காணப்படவில்லை. | | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) மாடிப்படி மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கான கட்டிடத்தை அணுகுவதற்கான முறைமை ஆகியவை காணி வடிவமைப்பில் வடிவமைக்கப்படவில்லை. எனினும், கட்டிடத்திற்குள் இவ்வாறானதொரு முறைமை வடிவமைக்கப்பட்டிருந்த போதிலும் தரையில் இருந்து அதனை அணுகுவதற்கான முறைமை இல்லாததுடன், விசேட தேவையுடையவர்களுக்கான அணுகு பாதையும் கட்டிடத்திற்குள் செல்ல முடியாததால் விளைவற்றிருந்தது. | | |

### 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஆலோசகர்களை பணிக்கமர்த்துவதற்கான பெறுகை வழிகாட்டல்களின் 2.5 (i), 4.3 மற்றும் 4.4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 2021 ஆம் ஆண்டில் ஆலோசகர்களுக்கு ரூபா 8 மில்லியன் சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது, மேலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆலோசகர்கள் செயற்திட்டம் தொடர்பான போதுமான சேவையை ஆற்றியிருந்ததாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | ஆலோசகர்களை பணிக்கமர்த்துவதற்கான பெறுகை வழிகாட்டலின் ஏற்பாடுகளில் எந்தவொரு மீறலும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தேவைப்படும் நேரத்தில், செலுத்தப்பட்ட தொகையுடன் ஒப்பிடும் போது இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து நான் சிறந்த சேவையைப் பெற்றேன் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். | தேவையற்ற பதவிகளை ஒழித்து அரசாங்க செலவினங்கள் குறைக்கப்பட வேண்டும். |
| **வடமேல் மாகாணம்** | | |
| (i) ரூபா 3.7 மில்லியன பெறுமதியான 156 ட்ரேப்சாய்டு (Trapezoid) மேசைகள் பொதுக் கல்வி நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கணிதக் கற்றல் மற்றும் கணிதச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்காக மீளாய்வாண்டில்கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. ட்ரேப்சாய்டின் கணிதக் கோட்பாட்டின் பிரகாரம் கணித நடவடிக்கைகளுக்கு பொருத்தமான மேசைகள் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கொள்வனவு செய்யும் போது தேவைப்பாடு தொடர்பாக கருத்தில் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுகை பற்றாக்குறை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தேவையைப் பொருட்படுத்தாமல் சரியான பரிந்துரைகளை வழங்காததால் கொள்வனவு செய்யப்பட்ட இந்த மேசைகள் அந்த கணித செயற்பாடுகளுக்கு ஏற்றது அல்ல என்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப கணித அறிவை வளர்த்துக் கொள்வதற்கு உலக வங்கியின் கடன் முறையாகப் பயன்படுத்தப்படாதமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) இச் செயற்திட்டத்தின் கீழ் 08 வலய அலுவலகங்களுக்கு ”பாடசாலை அடிப்படையிலான கற்றல் மேம்பாட்டு மானியமாக” (SBLEG) மீளாய்வாண்டில் ரூபா 102 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அவுட் ரைட் (Out Right) மானியத்தின் மூலம் இறுதிக் கொடுப்பனவாக, மேற்படி உதவித்தொகைகளின் பணம் நேரடியாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட்டதுடன், இது தொடர்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இந்த பணத்தின் வளமூலம் குறித்து அதிபர்களுக்கு தெரியாமல் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. பாடசாலைகளுக்கு மானியங்கள் அதிகபட்சமாக ரூபா 250,000 இற்கு உட்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கோ அல்லது செயற்திட்டத்தின் செயலாற்றலிற்கோ பாடசாலை அபிவிருத்திக்கோ இந்த தொகை போதுமானதாக இல்லாதமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | கொடுக்கப்பட்ட பணம் எவ்வாறு செலவழிக்கப்படுகிறது என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். |

**4. செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காகரூபா 24,161 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 66.24 மில்லியன் மொத்த தொகை செலவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் 2022 திசெம்பர் 31 இல்உள்ளவாறு ரூபா 5,086 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 21.05 சதவீதம் ஆகும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | காலதாமதத்தை மேவுகை செய்வதற்கு நிறைவேற்று முகவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்கு தனியாக நிதி பெறப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான அடிப்படை புத்தகங்கள் மற்றும் கணக்குகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்குத் தேவையான அடிப்படைக் கணக்குப் புத்தகங்களை முறையாகப் பேணுவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | புத்தகங்கள் மற்றும் கணக்குகளை முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விநியோகத்திற்குப் பின்னர் உபகரணங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக பின்தொடரப்படவில்லை. | உபகரணங்களை முழுமையாகப் பயன்படுத்துமாறு அனைத்து அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பிராந்தியக் கல்வி அலுவலகங்கள் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. | பின்தொடர் நடவடிக்கைகள் பொறுப்பான தரப்பினரால் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்வு MOE,MPAHA & PLG மற்றும் PEAs இன் உள்ளக பிரிவுகளால் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் செயற்திட்டத்திற்கான உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மாகாண சபைகளின் உள்ளக கணக்காய்வு பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாகாண அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பிரமாணங்களின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |